# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No.** 9/2022

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. சலேத்தம்மாள் **Rw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day of November 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 1 ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அது 1) TN-76-B-3312 தோஸ்த் வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி நகலும் அதன் விதிகள் மற்றும் நிபந்தனைகள் **எ.ம.சா.ஆ- 1** ஆகும். 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**7 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

TN-76-B-3312 தோஸ்த் வாகனம் விபத்து சமயத்தில் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை ஓட்டிய டேனியல் என்பவரின் மீதுதான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தின் காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்ததால் நாங்கள் தான் மனுதாரருக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் ஓட்டுநர் மீதுதான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டு குற்ற இறுதிஅறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இறந்துபோன நபர் வாகனத்தை அஜாக்கிரதையாக ஓட்டிவந்து தோஸ்த் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இது தொடர்பாக எங்கள் நிறுவனத்தில் களப்பணியாளர் நியமிக்கப்பட்டு அந்த அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2 ம் எதிர்மனுதாரர் வாகனத்தை பொறுத்த வரை எங்கள் காப்பீட்டு கழக பாலிசியில் விதிமீறல் எதுவும் இல்லை என்றால் சரிதான். இறந்துபோன நபர் இறக்க காரணம், எங்கள் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அதிவேகம்தான் காரணம் என்றால் சரியல்ல. மேற்படி தோஸ்த் வாகனம் எதிரே வந்த வாகனத்தின் மீது மோதும்வரை இறந்துபோன நபர் உயிரோடுதான் இருந்தார் என்றால் அதுபற்றிய விவரம் எனக்குதெரியாது. மேற்படி தோஸ்த் வாகனத்தின் ஓட்டுநர்தான் விபத்திற்கு முழு காரணம்என்றும், எனவே எங்கள் காப்பீட்டு கழகம்தான் மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகையை செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு இறந்துபோன நபரோ, 5 ம் எதிர்மனுதாரரோ காரணம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

**1, 2, 6 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi